**DEPOSITION OF WITNESS**

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, KANGAYAM**

| | | |
|---|---|---|
| Calender | : | STC 39/2018 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : | Prosecution P.W. 1<br>Defence |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சரவணகுகன் | தொழில் | : | சுயதொழில் |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | கிருஷ்ணசாமி | ஜாதி | : | |
| கிராமம் | : | திருப்பூர் | இனம் | : | |
| தாலூக்கா | : | | வயது | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 10.12.2021.

**சாட்சி மனுவின் பெயரில் மீண்டும் முன்னிலையாகி எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

வழக்கின் சங்கதிகள் பற்றி எனக்கு தெரியும். எனக்கு வெள்ள கோவிலில் தட்சிணாமூர்த்தி, குமரவேல் என நண்பர்கள் இருக்கிறார்களா என்றால் இல்லை. எதிரியின் குடும்ப விவரங்கள் பற்றி எனக்கு தெரியாது. எதிரி நூல் வியாபாரம் செய்து வருகிறார். எதிரி நூல் வியாபாரம் எதுவும் செய்து வரவில்லை என்றால் சரியல்ல. எதிரி நூல் வியாபாரம் செய்து வருகிறார் என்பதை காட்டும் ஆவணம் எதுவும் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் இல்லை. எதிரியின் மாத வருமானம் எவ்வளவு என்று எனக்கு தெரியாது. நான் வருமான வரி கணக்கு தாக்கல் செய்கிறேனா என்றால் இல்லை. வழக்கில் கண்ட காசோலை தொகையை வருமான வரி கணக்கில் எதுவும் காட்டியிருக்கிறேனா என்றால் இல்லை.

STC 39/2018 நாள். 10.12.2021., P.W. 1 விசாரணை தொடர்ச்சி

எதிரி எங்கு வைத்து தொகை பெற்றார் என்ற விவரத்தை என்னுடைய வழக்கறிஞர் அறிவிப்பிலோ புகாரிலோ, முதல் விசாரணை சாட்சியத்திலோ குறிப்பாக சொல்லியிருக்கிறேனா என்றால் இல்லை. வழக்கு காசோலை கடன் பொறுப்புறுதிக்காக கொடுக்கப்பட்டதாக நான் புகாரில் குறிப்பிட்டிருக்கிறேன் என்றால் சரிதான். செக்யூரிட்டிக்காக காசோலை கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை. காசோலையை எதிரி தான் பூர்த்தி செய்து கொடுத்தார். சலானில் நான் எழுதி வசூலுக்கு தாக்கல் செய்தேன். புகாரில் எதிரி என் முன்னிலையில் காசோலையில் கையெழுத்திட்டதாக குறிப்பாக எதுவும் சொல்லியிருக்கிறேனா என்றால் இல்லை. எதிரி தான் கையெழுத்திட்டு காசோலை கொடுத்தார். வழக்கு காசோலை தவிர வழக்கு பரிவர்த்தனை தொடர்பாக வேறு ஆவணங்கள் எதுவும் இருக்கிறதா என்றால் இல்லை. எனக்கு அறிமுகமான நபர்கள் யாரும் எதிரி தொகை கொடுக்கவில்லை என்றால் தாம் கொடுப்பதாக பொறுப்பு ஏற்று கொண்டார்களா என்றால் இல்லை. வழக்கு காசோலையானது கையெழுத்து மாறி உள்ளது என காரணம்காட்டி திருப்பப்பட்டது. காசோலையில் உள்ள கையெழுத்து எதிரியுடையது என்பதை காட்ட நான் நடவடிக்கை எதுவும் எடுத்தேனா என்றால் இல்லை. நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பிற்கு எதிரி பதில் அறிவிப்பு அனுப்பினார். நான் அதில் கண்டுள்ள சங்கதிகளை மறுத்து அறிவிப்பு எதுவும் கொடுத்தேனா என்றால் இல்லை. எனக்கு மகேந்திரன் எனும் நபரை தெரியும் என்றால் எனக்கு தெரியாது. எதிரிக்கும் மகேந்திரனுக்கும் ஒரு கடன் உறுதி சீட்டு வழக்கு நடந்து வந்தது என்றால் அவ்விவரம் எனக்கு தெரியாது. எதிரிக்கும் மகேந்திரனுக்கும் மாண்புமிகு காங்கேயம் சார்பு நீதிமன்றத்தில்

STC 39/2018 நாள். 10.12.2021., P.W. 1 விசாரணை தொடர்ச்சி

அசல் வழக்கு எண். 464/2017 தாக்கல் செய்யப்பட்டு, அவ்வழக்கானது கடந்த 26.03.2018 தேதியில் சமாதனமாக முடிக்கப்பட்டது என்றால் அவ்விவரம் எனக்கு தெரியாது. நான் 28.03.2018 தேதியில் தான் காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். எனக்கு வெள்ளகோவிலில் உறவினர்கள் இருக்கிறார்கள். மாமா பெயர் பழனிச்சாமி ஆகும். பழனிச்சாமியின் மகன் பெயர் சிவக்குமார் ஆகும். சிவக்குமார் எதிரி மீது மாண்புமிகு தாராபுரம் கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் அசல் வழக்கு தாக்கல் செய்திருக்கிறார் என்றால் அவ்விவரம் எனக்கு தெரியாது. மகேந்திரன் வழக்கு தாக்கல் செய்து, தொகை செலுத்தி சமாதானம் ஏற்பட்ட பிறகு, எதிரி மகேந்திரனுக்கு கொடுத்திருந்த வெற்று காசோலை மற்றும் கடன் உறுதி சீட்டை வைத்து, என் பெயரிலும் சிவக்குமார் பெயரிலும் பொய்யாக வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரி மகேந்திரனுக்கு செக்யூரிட்டிக்காக கொடுத்த வெற்று காசோலையில் எதிரியின் கையெழுத்தை நான் மோசடியாக போட்டு பொய்யாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் தான் காசோலையை பூர்த்தி செய்து வசூலுக்கு தாக்கல் செய்ததால் கையெழுத்தை மெய்ப்பிக்க நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. (கற்றறிந்த புகார்தாரர் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க சாட்சியின் தொடர் குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது)